6. பணிநியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலை வாய்ப்புப் பதிவு அட்டையை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அலுவலகத் தலைவர் சம்பந்தப்பட்ட நபரின் வேலைவாய்ப்புப் பதிவு அட்டையைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் பெற்றுக் கொள்ளவும்

7. இத்தற்காலிக நியமனமானது மாண்பமை சென்னை / சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளையில் இந்நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள தொகுதி IV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டதாகும்.

8. நியமனம் பெற்றுள்ள நபரின் கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் / தமிழ்வழிக் கல்வி பயின்ற சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்

9. நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, விதிகளின் படி மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால், தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

10. தனியரின் கோரிக்கை விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது. தனியர் தேர்வாணையத்திற்கு இத்தேர்வில் கலந்து கொள்ளச் செய்த விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளவை ஏதும் பின்னர் தவறு எனக் கண்டறியப்படின் தனியரின் தேர்வு மற்றும் நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

11. நியமனம் செய்யப்படும் பணியாளர் எஸ்.எஸ்.எல்.சி.ல் தமிழை ஒரு பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

12. இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினையும், துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண் 172) தேர்விலும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும் மேலும் தனியருடைய தகுதிகாண் பருவம் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நியாயமாக காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 33 (4)இன்படி இப்பணிநாடுநர் அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தனியர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை உடன் அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்

முதன்மைக் கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர்.
21.07.2023

பெறுநர்:

PADMAPRIYA A
W/O P.MURUGAVEL ANAIMETUKALAM ANDIPATTY KUTHARAYAR DAM, PAPPAMPATTI PO,
PALANI, DINDIGUL DISTRICT, TAMIL NADU 624621

நகல்: செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 03

நகல்: இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை - 06.

நகல்: மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல்: கோப்பிற்கு.

கோயம்புத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு. பாலமுரளி, எம்.ஏ., பி.எட்.,
ந.க. எண். 12085/அ1/2023, நாள். 27.09.2023.

பொருள்: நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு - தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தற்காலிக நியமன ஆணை வழங்குதல் -தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 151, பள்ளிக் கல்வித் (பக.1.1) துறை, நாள். 09.09.2022.
2. சென்னை-03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண். 1975/PSD.C2/2023, நாள். 25.08.2023.
3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023, நாள். 21.09.2023.

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் பணிநாடுநருக்கு அவரது பெயருக்கெதிரில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளி/அலுவலகத்தில் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளராகத் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வகை 14-ன் கீழ் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண். | பணிநாடுநரின் பெயர், பதிவெண் மற்றும் முகவரி | நியமனம் வழங்கப்படும் பள்ளி / அலுவலகம் |
|---|---|---|
| 104 | Reg.No.0510039153<br>PADMAPRIYA A<br>W/O P.MURUGAVEL ANAIMETUKALAM,<br>ANDIPATTY KUTHARAYAR DAM,<br>PAPPAMPATTI PO PALANI, DINDIGUL<br>DISTRICT, TAMIL NADU 624621 | மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். |

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நபர் பணியில் சேரும் போது சிவில் சர்ஜன் தகுதிக்குக் குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உடல் நலத்தகுதிச் சான்றினை உரிய படிவத்தில் பெற்று உடன் பணியில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

2. மாற்றுத் திறனாளிகள் சார்பில் அவர்களது ஊனத்தின் தன்மை மற்றும் சதவிகிதம் மற்றும் உடல் ஊனம் அவரது பணிக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்பன போன்றவை மாவட்ட மருத்துவ குழு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

3. அரசாணை (நிலை) எண். 303, நிதித் (ஊதியக்கட்டு) துறை, நாள். 11.10.2017ன்படி பணியில் சேர்ந்த நாள் முதல் ரூ.19500-62000(Level 8)இல் ஆரம்ப கட்ட ஊதியம் மற்றும் இதரப்படிகள் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

4. இப்பணியாளர் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) மட்டும் சேரத் தகுதி உடையவர் ஆவார்.

5. சம்மந்தப்பட்ட நபர் இப்பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் பணியில் சேரவேண்டும். பணியில் சேருவதற்குக் கால அவகாசம் / பணியிட மாற்றம் கேட்டு அனுப்பப்படும் கோரிக்கை ஏற்கப்படமாட்டாது. நியமனம் செய்யப்பட்ட இடத்தில் உரிய காலத்தில் பணியில் சேராவிடில் நியமனம் பெற்றுள்ள நபரின் பெயர் தேர்வாணையத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நியமன அலுவலரால் நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

(கு.பி.பா.)

அனுப்புநர்

திரு.இரா.கேசவக்குமார், எம்.ஏ.பி.எஸ்.சி.பி.எட்.,
மாவட்டக்கல்வி அலுவலர்
(இடைநிலை)
பொள்ளாச்சி

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்
முதன்மைக் கல்வி அலுவலகம்
கோயம்புத்தூர் 641 001

ந.க.எண் : 7042 /அ1/2023 நாள். 29 .09.2023

அய்யா,

பொருள் நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் -- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு – தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட திருமதி.அ.பத்மபிரியா என்பார் பொள்ளாச்சி , மாவட்டக் கல்வி (இடைநிலை) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக – தற்காலிக நியமன ஆணைபெறப்பட்டு பணியேற்றதின் – பணியேற்பு அறிக்கை பணிந்தனுப்புதல் – சார்பு.

பார்வை

1. அரசாணை (நிலை) எண்) 151 பள்ளிக் கல்வி (ப.க.1.1) துறை நாள் 09.09.2022
2. சென்னை – 03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலரின் கடிதம் எண் 1975/PSD-C2/2023 நாள் 25.08.2023
3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023 நாள் 21.09.2023.
4. கோயம்புத்தூர் மாவட்ட, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 12085/அ1/2023 நாள் 27.09.2023.

--------

பார்வை 3 மற்றும் 4 ல் காண் செயல்முறைகளின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட திருமதி.அ.பத்மபிரியா என்பார் பொள்ளாச்சி , மாவட்டக் கல்வி (இடைநிலை) அலுவலகத்தில் , இளநிலை உதவியாளராக தற்காலிக நியமன ஆணை பெறப்பட்டு 29.09.2023 முற்பகல் பணி ஏற்றுக்கொண்டார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. [signature] 29/9/23

மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலை)
பொள்ளாச்சி.

நகல்.

1. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|

/ நேரடி நியமனம் - பணியேற்பு /

சென்னை-03 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரின்
கடித எண். 1975/PSD/C2/2023. நாள்: 25.08.2023-ன்படி
24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர்
பணிக்குத் தெரிவு செய்யப்பட்டு பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு
தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண்: 104-ன்படி கோவை முதன்மைக் கல்வி
அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்: 12085/அ1/2023 நாள்: 27.09.2023
பொள்ளாச்சி மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) அலுவலகத்தில்
இளநிலை உதவியாளராக 29-09-2023 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.
இவ்வலுவலக ந.க. எண். 7042/அ1/2023 நாள் 30-10-2023

(ஒப்பம்) 30/10/23
மாவட்டக் கல்வி அலுவலர்
மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
பொள்ளாச்சி - 642 001
27/10/23 30/10/23

**பணிக்காலம் சரிபார்ப்பு**

இவரது பணிக்காலம் 29.9.23 முதல் 31.12.2023
முடிய சம்பளப்பட்டியல் மற்றும் இதர ஆவணங்களுடன்
சரிபார்த்து சரியாக உள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது

(ஒப்பம்) 3/1/24
மாவட்டக் கல்வி அலுவலர்
மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
பொள்ளாச்சி - 642 001
3/1/2024 3/1/24 3/1/24